




# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







## பெப்ரவரி 22, 23, 24 ஆம் திகதிகளில் தபால் மூல வாக்களிப்பு



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு பெப்ரவரி 22, 23 மற்றும் 24ஆம் திகதிகளில் இடம்பெறுமென தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## மதுபான கடைகளுக்கு பூட்டு

75வது சுதந்திர தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் மதுபான கடைகள் மூடப்படும் என கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாளை (04) நாடளாவிய ரீதியில் அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும்.

அத்துடன் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 5 ஆம் திகதி பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் மதுபான கடைகள் மூடப்படவுள்ளன.

## மகளிர் கிரிக்கெட் அணியின் ஆலோசகராக சுசந்திகா



இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் ஆலோசகராக ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் வென்ற சுசந்திகா ஜயசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

பெண்கள் கிரிக்கெட்டை மேம்படுத்தும் நோக்கில் அவர் இந்த பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளதாக இலங்கை கிரிக்கெட் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

## இலங்கைக்கு ஆதரவு வழங்கும் பாரிஸ் கிளப் உறுப்பு நாடுகள்



இலங்கைக்கு கடன் வழங்கிய பாரிஸ் கிளப் உறுப்பு நாடுகள் இலங்கைக்கான நிதி உத்தரவாதத்தை வழங்க தயாராக இருப்பதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை பெறுவதற்கு அந்த நிதி உத்தரவாதம் மிகவும் முக்கியமானது. இதேவேளை, இலங்கையின் இருதரப்பு கடன் வழங்குநர்களும் இலங்கைக்கு வழங்கவுள்ள ஆதரவை விரைவில் அறிவிக்க உள்ளனர்.

## பணத்தாளில் இருந்து நீக்கப்பட்ட பிரிட்டன் அரசி எலிசபெத்தின் உருவம்



பிரிட்டன் அரசி எலிசபெத் மறைவைத்தொடர்ந்து, தனது கரன்சி நோட்டுகளில் அவரது உருவம் இடம் பெறாது, புதிய கரன்சிகளில் அரசர் சார்லஸின் உருவமும் இருக்காது என்று அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது.

எனினும், இனி அச்சிடப்படும் நாணயங்களில் சார்லஸின் உருவம் பொறிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**தெலுங்கு திரைப்பட உலகின் பிரபல இயக்குநர் கே.விஸ்வநாத் (92) ஹைதராபாத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் வியாழக்கிழமை (பிப.2) காலமானார்.**

## இன்றைய வானிலை முன்னறிவித்தல்

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மேக மூட்டமான வானம் காணப்படுவதுடன், வடக்கு, வடமத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பிற்பகலில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது. வடக்கு, வடமத்திய, கிழக்கு, மற்றும் வடமேல் மாகாணங்களில் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-50 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

அனுராதபுரம் - அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.
மட்டக்களப்பு - அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.
கொழும்பு - பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.
காலி - பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.
யாழ்ப்பாணம் - அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.
கண்டி - பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.
நுவரெலியா - பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.
இரத்தினபுரி - பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.
திருகோணமலை - அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.
மன்னார் - அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.
(வளிமண்டலவியல் திணைக்களம்)

## மல்வத்து - அஸ்கிரிய தேரர்களை சந்தித்த ஜனாதிபதி



75 ஆவது சுதந்திர தின நிகழ்வுகளுக்கு முன்னதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மல்வத்து - அஸ்கிரிய தேரர்களை சந்தித்து ஆசி பெற்றார்.

13ஆவது திருத்தச்சட்டத்தை பாராளுமன்றத்தின் ஊடாக அமுல்படுத்துதல் அல்லது நீக்குவது தொடர்பில் ஜனாதிபதி வெளியிட்ட கருத்துக்கள், தென்னிலங்கையில் சில அரசியல்வாதிகளால் சர்ச்சைக்குரியதாக மாற்றப்பட்டு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்ற நேரத்தில், மகா சங்கத்தினரையும் சந்தித்து குறித்த சில அரசியல்வாதிகள் 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்தக்கூடாது என வலியுறுத்தியிருந்த சூழலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களின் இன்றைய சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

13வது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி தெரிவித்த கருத்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாக மூன்று மகாநாயக்கத் தேரர்கள் தெரிவித்துள்ளனர்.

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்தும் கெடுபிடிகள் தொடர்பில் அவர்களால் எழுதப்பட்ட கடிதம் நேற்று (02) ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் சுதந்திரம், ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பில் பாரிய பிரச்சினைகளை உருவாக்கும் 13வது அரசியலமைப்பு திருத்தத்தை ஒருபோதும் அமுல்படுத்தவே கூடாது என அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## 23 வயதில் பல சாதனைகள் படைத்த ஷூப்மன் கில்



ஷூப்மன் கில் இல்லாத இந்திய அணியை நினைத்துப் பார்க்க முடியாது என்கிற அளவுக்குத் தொடர்ந்து சதங்கள் அடித்து சாதனை படைத்து வருகிறார்.

நியூசிலாந்துக்கு எதிரான கடைசி மற்றும் 3 வது டி20 ஆட்டத்தில் இளம் வீரர் ஷூப்மன் கில்லின் சூறாவளி ஆட்டத்தால் 168 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று தொடரையும் 2 – 1 எனக் கைப்பற்றியது இந்தியா.

63 பந்துகளில் 7 சிக்ஸர்கள், 12 பவுண்டரிகளுடன் 126 ஓட்டங்கள் எடுத்து அசத்தினார் ஷூப்மன் கில். டி20 கிரிக்கெட்டில் தனிநபராக அதிக ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர் என்கிற சாதனையைப் படைத்துள்ளார். 2023 தொடங்கிய 1 மாதம் 1 நாளில் 3 சதங்களும் ஒரு இரட்டைச் சதமும் எடுத்துள்ளார்.

**23 வயதான ஷூப்மன் கில் இதுவரை சர்வதேச கிரிக்கெட்டில் நிகழ்த்தியுள்ள சாதனைகள்**

* A19 உலகக் கிண்ணத்தை வென்றுள்ளார். (2018 இல்)
* 2021 இல் அவுஸ்திரேலியாவில் டெஸ்ட் தொடரில் விளையாடி இந்திய அணியின் வெற்றிக்கு முக்கியப் பங்கு வகித்தார். (பிரிஸ்பேனில் 2 வது இன்னிங்ஸில் 91 ஓட்டங்கள் எடுத்தார்.)
* ஐபிஎல் போட்டியை வென்றுள்ளார். (2022 இல் குஜராத் அணி ஐபிஎல் கிண்ணத்தை வென்றது. ஷூப்மன் கில், 16 ஆட்டங்களில் 4 அரை சதங்களுடன் 483 ஓட்டங்கள் எடுத்தார்.)
* டி20 கிரிக்கெட்டில் தனிநபராக அதிக ஓட்டங்கள். (இதற்கு முன்பு விராட் கோலி 122 ஓட்டங்கள் எடுத்திருந்தார். அதை நேற்று முறியடித்தார் கில்.)
* A-19 உலகக் கிண்ணம், டெஸ்ட், ஒருநாள், டி20 என அனைத்திலும் சதமடித்துள்ளார்.
* ஒருநாள் கிரிக்கெட்டில் இரட்டைச் சதம்.
* டெஸ்ட், ஒருநாள், டி20 என மூன்றிலும் சதங்கள் அடித்த இந்திய வீரர்கள் கோலி, ரோஹித் சர்மா, ராகுல், ரெய்னா, ஷூப்மன் கில்.
* ஒருநாள் கிரிக்கெட்டில் 200 ஓட்டங்கள், டெஸ்ட், டி20யில் 100 ஓட்டங்கள் எடுத்த இந்திய வீரர்கள் – ரோஹித் சர்மா, ஷூப்மன் கில்.

## நாட்டை சீரழித்த திருடர்களை விட்டுக்கு அனுப்ப திசைகாட்டியால் மாத்திரம் முடியும் – அநுர




(பாறுக் ஷிஹான்)

தேர்தல் காலம் அரிசி, பணம் கொடுக்கும் வகையில் அரசியல் நாம் செய்யவில்லை. நாம் நாட்டை கட்டியெழுப்பக்கூடிய மாற்றத்தை உருவாக்க கூடிய வகையில் செயற்படுகிறோம். அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக இருக்க செயற்படுவோம். பழைமைவாத அரசியலை இல்லாமல் செய்து புதிய அரசியல் பயணத்துடன் பயணிக்க திசைகாட்டியுடன் பயணியுங்கள் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்தார். தேசிய மக்கள் சக்தியின் பொதுக் கூட்டம் சாய்ந்தமருது கடற்கரையில், புதன்கிழமை (01) தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்குழு உறுப்பினரும், கல்முனை தொகுதி அமைப்பாளருமான ஏ.ஆதம்பாவா தலைமையில் இடம்பெற்றது.

கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாறறுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், பிள்ளைகளுக்கு நல்ல கல்வி இருக்கின்றதா? வைத்தியசாலையில் மருந்துகள் தட்டுப்பாடு, விவசாயிகளுக்கு விவசாயம் செய்ய போதியளவு உரம் இல்லை, விவசாயம் செய்ய வளம் இருந்தும் வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்கின்றார்கள். இவையெல்லாம் வாக்களித்த மக்களுக்கு அரசாங்கம் என்ன செய்தது? என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். தேர்தல் காலம் வாக்குகளை பெறுவதற்காக சிங்கள தலைவர்கள் சிங்களவர்கள் பகுதிகளுக்கு சென்று இனவாதத்தை விதைத்து வாக்குகளை பெறுகின்றனர். அதேபோல் முஸ்லிம் தலைவர்கள் முஸ்லிம்கள் வாழும் பகுதிகளுக்கு சென்று இனவாதத்தை விதைத்து வாக்குகளை பெற்று வெற்றி பெற்று அங்கே இவர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்கின்றனர்.

ஆட்சியாளர்கள் இனவாதத்தை உருவாக்கி ஆட்சிக்கு சென்றனர். இதன் மூலம் என்ன நடந்தது? தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த நாம் செயற்படுவோம். ஒற்றுமையை ஏற்படுத்த திசைகாட்டியால் மாத்திரம் முடியும். மாலைதீவில் கடல் வளத்தை கொண்டு முன்னோக்கி சென்றுள்ளனனர். எமது நாட்டில் ஆட்சியாளர்கள் என்ன திட்டங்களை செய்து இருக்கின்றனர்? நாட்டின் சுற்றுலாத்துறை, விவசாயம், கடல் வளம், கனியம், உட்பட ஏனைய வளங்களைப் சரியாக பயன்படுத்தி நாம் நாட்டை கட்டியேழுப்புவோம்.

ஒலுவில் துறைமுகத்தில் அதிக பணம் செலவழித்தும் கூட கப்பல் எதுவும் வரவில்லை. மீனவர்களுக்கும் இறுதியில் பயன் இல்லை. ஹக்கீம், ரிசாத், ஹரீஸ், மகிந்த, ரணில் ஆகியோர் தமது பிரச்சினையை மட்டுமே தீர்த்துக் கொள்கின்றனர். ஆனால் அவர்களால் மக்களுக்கான தீர்வுகள் ஒன்றுமில்லை. நாம் ஒன்றிணைந்து மக்களின் பிரச்சினையை தீர்க்கவே உள்ளோம்.

நாட்டை சீரழித்த திருடர்களை விட்டுக்கு அனுப்ப திசைகாட்டியால் மாத்திரம் முடியும். தெற்கு, மேற்கு, கிழக்கு, வடக்கு, உட்பட ஏனைய மாகணாங்களில் அனைத்து இன மக்களின் ஒத்துழைப்புடன் ஆட்சியை நடத்த எம்மால் முடியும். அனைத்து இன மக்களும் ஒற்றுமையாக இருக்க செயற்படுவோம். பழைமைவாத அரசியலை இல்லாமல் செய்து புதிய அரசியல் பயணத்துடன் பயணிக்க திசைகாட்டியுடன் பயணியுங்கள் என்றார்.

## பட்ஜெட்டில் மக்களை மேம்படுத்தும் திட்டங்கள் இல்லை - கமல்ஹாசன்



மத்திய நிதிநிலை அறிக்கையில் மக்களை மேம்படுத்தும் நேரடிப் பயன் திட்டம் எதுவும் இல்லை என்று மநீம தலைவர் கமல்ஹாசன் கூறினார்.

இது தொடர்பாக அவர் வியாழக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், கோடிக்கணக்கான மக்கள் அன்றாட வாழ்வை நகர்த்த அல்லாடும் சூழலில் இந்திய பொருளாதாரம் பிரகாசிக்கிறது என்ற வெற்றுப் பெருமையுடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மத்திய நிதிநிலை அறிக்கையில் ஏழை மக்களின் வாழ்வை மேம்படுத்த நேரடிப் பயன் தரும் திட்டங்கள் இல்லை.

நடுத்தர வர்க்கத்துக்கான சில சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. வருவாய் இழப்பால் தவிக்கும் நடுத்தர மக்களுக்கு இந்த வரிச்சலுகையால் பெரிய பலன் இருக்கப்போவதில்லை.

கிராமப் பொருளியலை மேம்படுத்த, பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த, வேலைவாய்ப்புகளை அதிகரிக்க அறிவிப்புகள் ஏதும் இல்லை.

சேமிப்புக்கு பதிலாக, செலவை ஊக்குவிக்கும் திட்டங்களும், கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு உற்சாகமளிக்கும் அறிவிப்புகளும்தான் நிதிநிலையில் பளிச்சிடுகின்றன. வடக்குக்கு செழிப்பான, தமிழகத்துக்கு பெரிய அறிவிப்புகளோ நிதி ஒதுக்கீடுகளோ இல்லாத, ஏமாற்றங்கள் மிகுந்த நிதிநிலை அறிக்கை இது என்று அவர் கூறியுள்ளார்.

## காசாமுனை பகுதியில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல்



இஸ்ரேலுக்கும்பாலஸ்தீனத்துக்கும் இடையே எல்லை பிரச்சினை காரணமாக மோதல் போக்கு இருந்து வருகிறது.

மேலும் பாலஸ்தீனத்தில் உள்ள காசா முனை பகுதியை ஆட்சி செய்து வரும் ஹமாஸ் போராளிகள் அமைப்பு இஸ்ரேலுக்கு எதிராக தாக்குதல் நடத்தி வருகிறது.

இதற்கிடையே இஸ்ரேல் வசம் உள்ள மேற்குகரை பகுதியில் ஜெனின் அகதிகள் முகாமில் இஸ்ரேல் ராணுவ வீரர்கள் நடத்திய துப்பாக்கி சூட்டில் 9 பாலஸ்தீனியர்கள் பலியானார்கள். இதற்கு பதிலடியாக இஸ்ரேலில் மதவழிபாட்டுத்தலம் அருகே துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. இதில் 7 இஸ்ரேலியர்கள் பலியானார்கள்.

மேலும் சிலர் காயம் அடைந்தனர். இந்த ரொக்கெட் தாக்குதலுக்கு பதிலடியாக இஸ்ரேல் ராணுவம் காசா முனை பகுதியில் இன்று வான்வழி தாக்குதலை நடத்தியது. இஸ்ரேல் போர் விமானங்கள் மத்திய காசா முனை பகுதியில் உள்ள ஹமாஸ் அமைப்பின் முகாம்கள் மீது குண்டுகளை வீசின.

இஸ்ரேலின் தெற்கு பகுதியில் ஹமாஸ் போராளிகள் அமைப்பினர் ரொக்கெட்டுகளை ஏவினர். சில ரொக்கெட்டுகளை இஸ்ரேல் ராணுவம் நடுவானில் வழிமறித்து அழித்தது. தாக்குதலில் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து உடனடியாக தகவல் வெளியாகவில்லை. இஸ்ரேலில் மத வழிபாட்டு தலம் அருகே நடந்த துப்பாக்கி சூட்டுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரிவித்து இருந்தார்.

இந்நிலையில் தான் காசா முனை பகுதியில் வான்வழி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் இஸ்ரேல் - பாலஸ்தீனம் இடையே பதட்டம் தொடர்கிறது.

## பரியேறும் பெருமாள் பட புகழ் நெல்லை தங்கராஜ் உடல்நலக் குறைவால் காலமானார்



2018 ஆம் ஆண்டு மாரி செல்வராஜ் இயக்கத்தில் வெளியான பரியேறும் பெருமாள் படத்தின் மூலம் நடிகராக அறிமுகமானவர் நெல்லை தங்கராஜ். தெருக்கூத்து கலைஞரான நெல்லை தங்கராஜ் இப்படத்தில் பரியனின் (கதிர்) தந்தையாக நடித்து அனைவரையும் கவர்ந்திருந்தார்.

பரியேறும் பெருமாள் படத்தின் மூலம் பிரபலம் அடைந்திருந்தாலும் வசிப்பதற்கு வீடு இல்லாமல் குடிசை வீட்டில் வாழ்ந்து வந்த தங்கராஜூக்கு மாவட்ட நிர்வாகம் சார்பில் அவருக்கு வீடு கட்டிக் கொடுக்கப்பட்டது. இந்நிலையில் தெருக்கூத்துக் கலைஞரும் நடிகருமான நெல்லை தங்கராஜ் இன்று அதிகாலை 5 மணிக்கு உடல்நலக்குறைவால் காலமானார். இவரது மறைவிற்கு திரையுலகினர், கலைஞர்கள், ரசிகர்கள் என பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.